CC No.45/2023 அ.சா.1: ரெத்தினக்குமார் த/பெ.தியாகராஜன் நாள்: 01.08.2025

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கு காசோலையை தவிர வேறு ஏதாவது காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்து பணம் பெற்றுள்ளேனா என்றால், இல்லை. அடுத்தவருடைய காசோலையை பூர்த்திசெய்யக்கூடாது என்பது வங்கி நடைமுறை தெரியுமா என்றால், தெரியாது. நான் இவ்வழக்கு காசோலையை நானே பூர்த்தி செய்து வசூலுக்கு தாக்கல் செய்தது சட்டப்படியும், வங்கி நடைமுறை விதிகளின் படியும் தவறானது என்று சொன்னால், சரியல்ல. எதிரிக்கு நான் பணம் கொடுக்காத காரணத்தினால்தான் நானே அவரது காசோலை பூர்த்தி செய்துகொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரிக்கு கொடுத்த தொலையை வாங்கிக் கொடுத்ததாக சொல்லப்படும் நபரை எனது தரப்பு சாட்சியாக விசாரணை செய்துகொள்ளவில்லை என்று சொன்னால், சரிதான். எனது முதல் விசாரணை சாட்சிய பிரமாண பத்திரத்தில் நான் வேறு ஒரு நபரிடம் பணம் வாங்கி எதிரிக்கு கொடுத்ததாக கூறப்படும் விபரத்தை சொல்லவில்லை என்று சொன்னால், சரிதான். எனது மாத வருமானம் எவ்வளவு என்றால், மாதம் பத்தாயிரம் முதல் பண்ணிரண்டாயிரம் வரை வருமானம் வரும். எனது மாத வருமானமே பண்ணிரண்டாயிரம் இருக்கும் போது என்னால் எதிரிக்கு இவ்வழக்கு காசோலை தொகையை கொடுப்பதற்கு அரவே வாய்பில்லை என்று சொன்னால், சரியல்ல. அதனால் எதிரி என்னிடம் பணம் வாங்கிகொண்டு எந்த காசோலை மோசடி குற்றமும் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.